SHRI SHANKARLAL SUNDARBAI SHASUN JAIN COLLEGE FOR WOMEN

A Unit of Sri S. S. Jain Educational Society | Reaccredited by NAAC
Affiliated to University of Madras | An ISO 9001:2015 Certified Institution
ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி

**அகத்தர மதிப்பீட்டு மையம் (IQAC)**

**&**

**தமிழ்த்துறை**

**மற்றும்**

**மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறை, கோலாலம்பூர்**

**சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், கோவை**

UNIVERSITI MALAYA

IOR PRESS

**இணைந்து நடத்தும்**

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

# தலைப்பு: விருது பெற்ற இலக்கியங்கள்

**பதிவுப் படிவ இணைப்பு**

https://forms.gle/62Q4ZGpRhXMoxchk7

நாள்: 28.01.2022

நேரம்: காலை 10.00 மணி

களம்: இணையவழி

எண் 3, மேட்லி சாலை, தி.நகர், சென்னை - 17.

044-24328506 / 07 www.shasuncollege.edu.in

**புரவலர்கள்**

ஸ்ரீ. அபய ஸ்ரீஸ்ரீமால் ஜெயின்
செயலர்

ஸ்ரீ. ஆர். அசோக் குமார் மேத்தா
இணைச் செயலர்

முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
துறைத்தலைவர், இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக் கழகம், கோலாலம்பூர், மலேசியா

**இணைப் புரவலர்கள்**

முனைவர் சா. பத்மாவதி
முதல்வர்

முனைவர் ச. ருக்மணி
துணை முதல்வர்

முனைவர் சா.தி. தீபா
ஆய்வு இயக்குநர்

**புற ஒருங்கிணைப்பாளர்**

முனைவர் இரவீந்திரன் மாரையா
இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக் கழகம்
கோலாலம்பூர், மலேசியா

**செயலர்கள்**

திருமதி நா. உமா மகேஸ்வரி
தமிழ்த்துறைத் தலைவர், சுழற்சி I

முனைவர் ம. ராணி
தமிழ்த்துறைத் தலைவர், சுழற்சி II

**அக ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் மு. பரமேஸ்வரி
தமிழ்த்துறை, சுழற்சி I

முனைவர் செ. ஆனந்தி
தமிழ்த்துறை, சுழற்சி II

**அமைப்புக் குழு**

செல்வி இரா. நாகராணி
முனைவர் இரா. கீதா
முனைவர் ச. உமாராணி
திருமதி த. வாசுகி
முனைவர் த. வனிதா தேவி,
திருமதி செ. புனிதவதி
முனைவர் சிவபாலன் கோவிந்தசாமி
முனைவர் மோகனதாஸ் இராமசாமி
முனைவர் சில்லாழி கந்தசாமி

**ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி**

வணக்கம். சென்னை, தி.நகரின் வணிக வளாகங்களுக்கிடையில் ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி 2005 ஆம் ஆண்டு முதல் தனது கல்விப் பயணத்தைத் தொடங்கியது. இங்கு வணிகவியல், வணிக மேலாண்மையியல், கணினியியல், காட்சி ஊடகவியல் உள்ளிட்ட கலை அறிவியல் பட்டப் படிப்புகள், முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுத் துறைகள் செயல்பட்டு வருகின்றன. மாணவர்களுக்குத் தரமான கல்வியைக் கொடுக்கும் உயரிய சிந்தனையோடு, மிகச் சிறந்த கல்வி நிறுவனமாக இக்கல்லூரி குறுகிய காலத்தில் தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. தனது 16 ஆண்டுகாலக் கல்விப் பயணத்தில் தேசியத் திறனாய்வு மன்றத்தின் தகுதியையும், சர்வதேசத் தர அமைப்பான ISO 2009-2015 சான்றிதழையும் இந்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசியத் தரநிலை கட்டமைப்பு நிறுவனத்தின் 2020-21-க்கான தரவரிசையில் 151-200 Band இடத்தையும் பெற்றுள்ளது. இங்கு மாணவர்களின் ஆளுமையை வளர்க்கும் வகையில் அடிப்படைக் கல்வியுடன் நுண்கலைக் கல்வியும் பயிற்றுவிக்கப்படுகிறது. நவீன மயமாக்கல், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் புதுப்பித்தல் ஆகியவற்றின் மூலம் இந்தியாவில் சில்லறை வர்த்தகத் துறையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக ஷசுன் திறன் மேம்பாட்டுமையம் சிறப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்வி கற்பித்தலோடு மாணவர்களைத் தொழில் முனைவர்களாகவும், தற்சார்புடையவர்களாகவும் உருவாக்கும் மேலான சிந்தனையுடன் இக்கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கிறது.

**தமிழ்த்துறை**

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்” என்று பாரதி நவின்ற தமிழின் இனிமையை உணர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கும் தமிழ்த்துறை, 2005 முதல் தகுதி வாய்ந்த உதவிப் பேராசிரியர்களைக் கொண்டு அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் அடித்தளத் தமிழைக் கற்பித்து வருகிறது.

அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள், மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கும் கணினித் தமிழ்ப் பயிற்சிகள், பயிலரங்கங்கள் ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், மாணவர்களுக்கு நூல் விமர்சனங்கள், தமிழ் மன்றத்தின் சார்பில் திறன்வளர் போட்டிகள், இலக்கிய வரலாற்று நாடகங்கள், தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் தமிழ்த்துறையில் நடைபெற்று வருகின்றன. தமிழ்த்துறையின் பதிப்புப் பணிகளில் கருத்தரங்க ஆய்வுக்கோவைகளும் கடந்த ஆறு ஆண்டுகளாக வெளியாகும் "எழில்" என்கிற மின்னிதழும் குறிப்பிடத்தக்கவை. தமிழ்த்துறை இவ்வாண்டும் "விருது பெற்ற இலக்கியங்கள்" என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கினை மலாயாப் பல்கலைக்கழகம் மற்றும் சர்வதேசத் தமிழாய்விதழுடன் இணைந்து நடத்த முனைந்துள்ளது.

**மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை, கோலாலம்பூர்**

1949 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ராஃபிள்ஸ் கல்லூரி மற்றும் கிங் எட்வர்ட் VII மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் இணைப்பில் மலாயாப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு ஆகிய பாடங்களை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் நோக்கில் 1956 ஆம் ஆண்டு மலாயாப் பல்கலைக்கழக வளாகத்தில், கலைப்புலத்தின் ஓர் அங்கமாக இந்திய ஆய்வியல் துறை நிறுவப்பட்டது. தமிழுக்காக உருவாக்கப்பட்ட இத்துறையில் மலாயாவிலேயே மிகப்பெரிய தமிழ் நூலகமும் செயல்பட்டு வருகின்றது. 1959 ஆம் ஆண்டில் மாணவர் நலனை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்ட தமிழ்ப்பேரவை, "தமிழ் ஒளி" என்னும் ஆய்விதழை வெளியிட்டு இன்றுவரை சாதனை படைத்து வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் தற்போது மலேசிய இந்திய ஆய்வியல் மையம் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பணிகள் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. பேராசிரியர்கள் தங்களது ஆய்வுப் படைப்புகளை வெளியிடும் வகையில் இந்திய ஆய்வியல் துறையின் கீழ் 1983-லிருந்து ஆண்டுதோறும் ISSN எண்ணுடன் இந்திய ஆய்விதழ் வெளியிடப்பட்டு வருகின்றது. இங்கு இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டங்களில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமிழை முதன்மைப் பாடமாகப் பயின்று வருகின்றனர். மொழியியற்புலம் என்ற மற்றொரு துறையிலும் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது.

**சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், கோவை**

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், இந்தியாவின் முதல் Google Scholar, Cross Ref Indexe மற்றும் DOI எண் பதிவு பெற்ற தமிழ் ஆய்விதழாகும். தமிழின் தொன்மையையும் வளர்ச்சியையும் நவீன முன்னேற்றங்களையும் அனைவரும் புரிந்து கொள்ளச் செய்வதே இதன் நோக்கமாகும். தமிழ் இலக்கிய ஆராய்ச்சியை மேம்படுத்தும் வகையிலும் தமிழோசை உலகெங்கும் ஒலிக்கும் வகையிலும் இவ்வாய்விதழ் தனது முழுமையான பங்களிப்பை நல்கி வருகிறது. தமிழ் ஆய்வுப் படைப்புகளை இணையத்தின் வழி உலக ஆய்வியல் தளத்திற்குக் கொண்டு சேர்ப்பதற்காக உருவாக்கப்பட்டு, இன்று பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களிடமிருந்து பெறப்பட்ட தரமான ஆய்வுக் கட்டுரைகளை ஆய்வுத்தர மதிப்பீட்டிற்கு உட்படுத்தி பின் இணையத்தில் வெளியிட்டு வருகின்றது. தமிழாய்வுகளை உலகளாவிய பயன்பாட்டிற்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்ற வகையில் எண்ணிமப்படுத்துதல்(digitize), குறுந்திட்ட ஆய்வுகளுக்கு நிதியுதவி அளித்தல், புதிய களங்களில், புதிய அணுகு முறைகளில் ஆய்வு செய்ய ஆய்வாளர்களை ஊக்குவித்தல் முதலிய பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. மேலும் ஆய்வுலகிற்கு மேன்மை சேர்க்கும் வகையில் பல்வேறு பயிலரங்குகளையும், கருத்தரங்குகளையும் தொடர்ந்து நடத்தி வருகின்றது. தற்போதைய சூழலில், பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இவ்வாய்விதழ் (UGC CARE list journal) ஷசுன் கல்லூரியின் தமிழ்த்துறையோடு இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்த முன் வந்துள்ளது.

**கருத்தரங்க நோக்கம்**

மூத்த மொழியாகிய தமிழ் காலந்தோறும் தன்னை இளமையாக்கிக் கொண்டு வருகிறது. தமிழின் பல்வேறு தளங்களைப் பற்றிய ஆய்வுகளும், கருத்தரங்கங்களும், திறனாய்வுகளும் நடைபெற்று வருகின்றன. 19-20 ஆம் நூற்றாண்டு இலக்கியங்களாகிய கவிதை, கட்டுரை, உரைநடை, சிறுகதை, புதினம், கடிதம், மொழிபெயர்ப்பு குறித்த ஆர்வம் படைப்புத் தளத்திலும், வாசகர் தளத்திலும் சற்றுக் குறைவாக உள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்தத் தேக்கத்தை நீக்கும் வகையில் அரசும், பல்வேறு இயக்கங்களும் அமைப்புகளும் படைப்பிலக்கியத்திற்கான பரிசுகளையும் விருதுகளையும் வழங்கி வருகின்றன. இருப்பினும் தமிழ் இலக்கியங்கள், இலக்கியப் படைப்பாளர்கள் பற்றிய தரவுகள் முழுமையாக ஆவணமாக்கம் பெறவில்லை. அரசு விருதுகளைத் தவிர படைப்பாளருக்கு வழங்கப்படும் பிற விருதுகள், அவை சார்ந்த அமைப்புகளைப் பற்றிய தரவுகள் கிடைப்பது அரிதினும் அரிதாகவுள்ளது. இந்நிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதலும், இயன்றவரை ஆய்வாளர்களின் கட்டுரைகளில் கிடைக்கும் தரவுகளை ஆவணப்படுத்துதலும் இப்பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் நோக்கங்களாகும்.

**ஆய்வுக் களங்கள்**

- சாகித்ய அகாதெமி விருது பெற்ற இலக்கியங்கள்.
- ஞானபீட விருது பெற்ற இலக்கியங்கள்.
- நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள்.
- தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்ற நூல்கள்.
- படைப்பு இலக்கிய விருது பெற்ற நூல்கள்.

என இவை போன்று பிற விருது பெற்ற இலக்கியங்களும் கட்டுரைகளாகக் கொள்ளப்படும்.

**கட்டுரையாளர்கள் கவனத்திற்கு**

1.தமிழ் மற்றும் பிறமொழி சார்ந்த விருது பெற்ற இலக்கியங்களும் வரவேற்கப்படுகின்றன.

2.தமிழ் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் என விருப்பமுள்ள அனைவரும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கலாம்.

3.ஆய்வுக் கட்டுரையைச் சொற்கோப்பில்(Word Document) 12 புள்ளி எழுத்தளவில் A4 தாளில் 1.5 இடைவெளியுடன் லதா யுனிகோடு(Latha Unicode Font) எழுத்துருவில் கணினிவழி தட்டச்சு செய்து 10 பக்கங்களுக்கு மிகாமல் அனுப்புதல் வேண்டும்.

4.ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக் கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவானதாகவும், புதிய மற்றும் அசல் கண்டடைவாகவும், இதற்கு முன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவராததாகவும் இருத்தல் வேண்டும்.

5.கட்டுரைகள் தலைப்புக்குத் தொடர்புடையதாக, ஒற்றுப்பிழை, எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை ஆகிய பிழைகளின்றி, ஆய்வு நெறிமுறைகளின்படி எழுதப்பட்டு, உரிய காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.

6.கட்டுரையாளர் பெயர், பதவி, துறையின் பெயர், கல்லூரி/பல்கலைக்கழகம், நகரம், அஞ்சல் குறியீடு, நாடு, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியன தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கட்டாயம் இடம்பெற வேண்டும்.

7.கட்டுரைத் தலைப்பு, ஆய்வுச் சுருக்கம், குறிச்சொற்கள், முன்னுரை, ஆய்வுரை(துணைத் தலைப்புகளுடனும், விவாதங்களுடனும்) ஆய்வுப் பயன்கள், முடிவுரை ஆகியன உள்ளடக்கியதாக கட்டுரையின் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.

8.மேற்கோள்கள் எங்கெங்கு எடுத்தாளப்படுகின்றனவோ அந்தந்த இடங்களிலேயே ஆசிரியர் பெயர், ஆண்டு எ.கா. (சுவாமிநாத ஐயர், உ.வே. 1984) மட்டும் குறிப்பிட வேண்டும்.

9.மேற்கோள் விபரங்கள்(ஆசிரியர் பெயர், வெளிவந்த ஆண்டு, புத்தகத்தின் பெயர், வெளிவந்த பதிப்பு வரிசை, வெளியீட்டாளர் பெயர் மற்றும் முழு முகவரி) கட்டுரையின் இறுதியில் இடம்பெற வேண்டும். கட்டுரை தமிழில் மட்டுமே இருத்தல் வேண்டும். கட்டுரைத் தலைப்பு, ஆய்வுச் சுருக்கம் தமிழில் தரலாம். ஆங்கில மொழி பெயர்ப்பு கட்டாயம் அல்ல.

10.கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளைக் கட்டாயம் வாசித்தளிக்க வேண்டும். கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை வாசிக்கும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

11.ஒரு கட்டுரையை ஒன்றிற்கும் மேற்பட்டோர் இணைந்து எழுதுவதாக இருப்பின், அனைவருக்கும் ஒரே சான்றிதழ் மட்டுமே வழங்கப்படும். மேலும் கட்டுரையின் நிறைவில் பெயர், கல்லூரி முகவரி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். கட்டுரை தொடர்பாகக் குழுவிற்கு ஐயம் ஏற்படின் முதன்மைக் கட்டுரையாளரையே கலந்தாலோசிக்கப்படும்.

13.ஆய்வு குறித்து பங்கேற்பாளர்கள் எழுப்பும் வினாக்களும் விவாதங்களும் கட்டுரையின் மீதான முதல் மதிப்பீடாக அமையும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்ட கட்டுரைகள் வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC–CARE listed Journal) மின்னிதழில் வெளியிடுவதற்குப் பரிந்துரைக்கப்படும்.

14.தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் மட்டுமே சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணமாக ரூ.1500/-(அயல்நாட்டினர் இந்திய மதிப்பில் ரூ.1500/-) செலுத்த வேண்டும். (சிறப்பிதழில் வெளியிடுவதற்கான கட்டணம் பின்னர் பெறப்படும்).

15.ஆய்வுக்கட்டுரைகளை**tamilconference@shasuncollege.edu.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 10.01.2022 ஆம் தேதிக்குள் அனுப்புதல் வேண்டும். கட்டுரையில் ஆசிரியர் பெயர், பதவி, பணி இட முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட விபரங்களைக் கட்டாயம் பதிவு செய்தல் வேண்டும்.

16.கருத்தரங்கில் பங்கேற்கும் அனைவரும் பதிவுக்கட்டணமாக ரூ.100/- (அயல்நாட்டினர் இந்திய மதிப்பில் ரூ.100) செலுத்தித் தங்களின் பங்கேற்பை உறுதி செய்து கொள்ள வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டிய வங்கி விபரம் பின்வருமாறு,

**Account details**

**Shri Shankarlal Sundarbai Shasun Jain College for Women**

| | |
|---|---|
| Account No | : 10057920971 |
| Account Type | : Savings Account |
| IFSC Code | : IDFB0080102 |
| Branch | : Nungambakkam Branch |
| Bank Name | : IDFC FIRST BANK |

**கட்டுரைகள் அனுப்புவதற்கான இறுதி நாள்: 10.01.2022**

**அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி**

tamilconference@shasuncollege.edu.in

**கருத்தரங்கத் தொடர்பு எண்கள்:**

முனைவர் மு.பரமேஸ்வரி - +919003134328,

முனைவர் செ.ஆனந்தி - +919094001283

**கட்டுரையின் மாதிரிப் படிவம்**

https://drive.google.com/file/d/1zFEeR993yxblSWjK2fALyS0bqWgiofbm/view?usp=sharing

**குறிப்பு:** ஆய்வுக் கட்டுரை அனுப்புவோர் கட்டுரை அனுப்பியதற்கான பதிவுப்படிவம் மற்றும் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு, உரிய மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றைக் கூகுள் படிவத்தில் பதிவு செய்தல் வேண்டும்.